ஆச்சரியமாக இருக்கின்றது. வரையறுக்கப்படாத நிதியே ரூ.2 கோடியே 10 இலட்சம் வரை இருக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வரையறுக்கப்படாத நிதி 2 கோடி ரூபாய் வரை இருக்கிறது. கண்டிப்பாக, நீங்கள் கொடுக்கலாம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***22058—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பொள்ளாச்சி தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு அன்பான காலை வணக்கம்.

2022 ஏப்ரல் 22]

*** என்பது பொன்மனம் படைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பொள்ளாச்சி கல்வி மாவட்டத்திலே மட்டும் 91 அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள், தனியார் மேல்நிலைப் பள்ளிகள், தனியார் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளிலே இருக்கிற மாணவ, மாணவியருடைய அடர்வுக்கு ஏற்றவகையிலே, ஒரே ஓர் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரி மட்டும்தான் உள்ளது. எனவே, நல்ல மனதோடு மேலும் ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துக் கொடுத்தால், பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதிகளான வால்பாறை, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு போன்ற பகுதிகளிலுள்ள அனைத்து மாணவ, மாணவியருடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இருக்கும். மேலும், தொழில் மாவட்டமான கோயம்புத்தூரிலே,* diploma *படித்த மாணவ, மாணவியருக்குத்தான் அதிக வேலைவாய்ப்புத் திறன் உள்ளது என்பதை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் கல்வியாண்டில் ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். பல்வேறு தொகுதிகளிலும் இந்தக் கோரிக்கைகள் இருக்கின்றன. பொள்ளாச்சியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே ஓர் அரசு உதவிபெறும் கல்லூரியும், 2 சுயநிதி கல்லூரிகளும் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் 1,640. ஆனால், எவ்வளவு இடங்கள்* fill up *ஆகியிருக்கிறதென்றால், 674 பேர்தான் கல்லூரிகளில் சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் சொன்னமாதிரி, தொழிற்சாலைகள் நிறைந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலே பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்வதற்கு ஆள் இல்லை. அங்கே 966 இடங்கள் காலியாக*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இருக்கின்றன. ஆகவே, முதலில் அங்கேயிருக்கிற தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்கு—நான் அன்றைக்கே முதல் கேள்வியின்போதே சொல்லியிருக்கிறேன்—அந்தக் காலியிடங்களையெல்லாம் நிரப்புவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் 'நான் முதல்வன்' திட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வாறு அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் சொல்லியிருக்கிறேன். ஆகவே, வருங்காலங்களிலே, நீங்கள் சொன்னதைப்போல, அனைத்து மாணவர்களும் சேர்ந்த பிறகு அங்கே பற்றாக்குறை இருக்குமானால், இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நல்ல கேள்வியாகக் கேளுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது பொள்ளாச்சி சுற்று வட்டாரத்திலே ஒரேயொரு அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரி மட்டும் உள்ளது. அது எப்போதும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. அங்கே மாணவ, மாணவியருடைய எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில் உள்ளது. அங்கே கட்டட வசதியும், நெகமம் பகுதியிலே அரசுக்குச் சொந்தமான ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே போதுமான வகுப்பறைகளும், காலியிடமும் உள்ளன. அதேபோன்று பொள்ளாச்சி சமத்துவ நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் போதுமான காலியிடமும், வகுப்பறைகளும் உள்ளன. அங்கே தேவைகள் நிரம்பி பூர்த்தி செய்யப்படாமல் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவ, மாணவியர்கள் அங்கே சேர்வதற்கு அதிகமான அளவில் ஆர்வத்தோடு உள்ளார்கள் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 91 மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் உள்ள பொள்ளாச்சி கல்வி மாவட்டத்திலே, ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகூட இல்லாத சூழ்நிலையிலே, வரும் கல்வியாண்டிலே ஒரு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான கட்டட வசதிகளும், இட வசதியும் தயார் நிலையில் இருப்பதால், இல்லையென்று சொல்லாமல், நிறைவேற்றித் தருமாறு அன்போடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 22]
மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சியிலே 10 ஆண்டுக் காலமாக பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். 10 ஆண்டுகளாக ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை அங்கே கொண்டுவர இயலாத ஒரு சூழ்நிலை இருந்திருக்கிறது. அதற்கெல்லாம் காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியும். பொதுவாக, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூரிலே, நான் முதலிலே புள்ளிவிவரத்துடன் எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதையும் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், தொழிற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்தால்தான், பொறியியல் கல்லூரியிலும் சரி,* Polytechnic *கல்லூரியிலும் சரி, மாணவர்கள் சென்று படிப்பார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளையெல்லாம் நான் கூறினேன். மேலும், நாளைக்குக்கூட, தொழில் துறையும், உயர் கல்வித் துறையும் சேர்ந்து, அண்ணா பல்கலைக்கழகத்திலே தொழில் முனைவோர்களையெல்லாம் அழைத்து, ஒரு பயிற்சி முகாமை நடத்தவிருக்கிறது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே, வருங்காலங்களிலே* polytechnic *படிக்கிற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். பொறியியல் படிப்பு, தொழிற்படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும். வேலைவாய்ப்பு மட்டுமல்ல, அவர்கள் சுயதொழில் ஆரம்பிப்பதற்கான பயிற்சியும் அளிக்க வேண்டுமென்றுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் நிறைவேறுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி சட்டமன்றத் தொகுதி பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கு படிக்கின்ற ஏழையெளிய மாணவர்கள் மேற்படிப்பை தொடர்கின்றபட்சத்தில் வந்தவாசி தொகுதியிலிருந்து வெகுதூரம் சென்று படிக்கின்ற காரணத்தினால் அவர்கள் மேற்படிப்பு தொடர்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில், ஓர் அரசு* polytechnic *கல்லூரி அமைத்துத் தருவார்களா? அதுமட்டுமல்ல, சென்ற ஆண்டுக்கு முன்னால் 'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்ற நிகழ்ச்சியில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டபோது, "வந்தவாசி சட்டமன்றத் தொகுதிக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்; கழக ஆட்சி அமைந்தவுடன் அங்கு ஒரு* polytechnic *கல்லூரி அமைத்துத் தரப்படும்" என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை, தகவலைத் தெரிவித்தார். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு ஒரு* polytechnic *கல்லூரியை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் வந்தவாசியிலே ஓர் அரசு கலைக் கல்லூரியைத் துவக்கி வைத்தோம். அதுமட்டுமல்ல; ஒரு தனியார்* polytechnic *கல்லூரியும் அந்தத் தொகுதியிலே இருக்கிறது. நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் அந்தக் கோரிக்கை இருப்பது நியாயமானது. தொகுதிக்காக கேட்பதை தவறு என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் நீங்கள் முழுமையாக உணர்ந்துகொள்ள வேண்டும்.* Polytechnic *கல்லூரிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 1,10,815 காலியிடங்கள் இருக்கின்றன. அதைத்தான் நான் முதலில் சொன்னேன். இந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்தால், தானாகவே மாணவர்கள் வந்து சேருவார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நடவடிக்கையாக எடுத்துக்கொண்டு, தொழில் துறை, கல்வித் துறை, தொழிற்*

2022 ஏப்ரல் 22]

பயிற்சி துறை ஆகிய மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து 'நான் முதல்வன்' என்ற திட்டத்தில் அறிவித்திருக்கிறார். வருங்காலங்களிலே அது தேவைப்படுகிறபோது நிறைவேற்றப்படும். அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் அவர் சொன்னதுபோல் அங்கு அரசு கலைக் கல்லூரியும் இருக்கிறது; தனியார் polytechnic *கல்லூரியும் இருக்கிறது. அதிலே, காலியிடங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, வருங்காலங்களில் தேவை ஏற்படின் அது பற்றி அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாகப்பட்டினம் மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம். விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், மிகுந்து இருக்கின்ற மாவட்டம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு* polytechnic *கல்லூரி என்பது அறவே இல்லை. மருத்துவக் கல்லூரி இருக்கிறது;* Fisheries college *இருக்கிறது. ஆனால், அரசு* polytechnic *கல்லூரி என்பது எங்கள் மாவட்டத்தில் அறவே இல்லை. அரசு* polytechnic *கல்லூரியில் படிக்க வேண்டும் என்றால், 120 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சீர்காழிக்குச் சென்றுதான் படிக்க வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* polytechnic *கல்லூரி அமைத்துத்தர முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் சொன்ன பதில்தான். இருந்தாலும் நான், உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது, மாணவர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு பல்வேறு கடினமான சூழ்நிலைகளெல்லாம் இருப்பது உண்மை. அதற்காகத்தான் நாம் இப்போது முதலில் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் காலியிடங்கள் இருக்கின்றன. தனியார்* polytechnic *கல்லூரிகளிலும் காலியிடங்கள் இருக்கின்றன. அரசு* polytechnic *கல்லூரிகளிலும் காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, முதலில் இந்தக் காலியிடங்களையெல்லாம் நிரப்ப வேண்டும்.*

அதுவும் எங்கள் தலைவர் அவர்களும், அந்த இடத்திலே உங்களுக்கு polytechnic கல்லூரி உருவாக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொள்பவர்தான். ஆகவே, வருங்காலங்களிலே தமிழகம் முழுவதும் கல்வி வளர்ச்சியை அதிகமாக்க வேண்டும். இந்த வருடம், 10 அரசு கலைக் கல்லூரிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதியதாகக் கொடுத்திருக்கிறார். அதுவே பெரிய விஷயம். இந்த இரண்டு கல்வி ஆண்டுகளில் அவர் கொடுத்திருக்கிற கல்லூரிகளின் எண்ணிக்கை 31. இவ்வாறு 31 கல்லூரிகளைக் கொடுத்திருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு கலைக் கல்லூரிகளில் நிறைய இடம் தேவைப்படுகிறது. Shift system கொண்டு வந்ததும் கலைஞர் ஆட்சியில்தான். அந்த shift system–த்தில் இப்போது ஒரு யோசனை இருக்கிறது. காலையில் ஆண்கள், மதியம் பெண்கள் அல்லது காலையில் பெண்கள், மதியம் ஆண்கள் என்று மாற்றி அமைக்கலாம் என்ற யோசனைகள் இப்போது பரிசீலனையில் இருக்கின்றன. (குறுக்கீடு)

முற்பகல் 10–40

நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, அரசு முதன்மைச் செயலாளர் அவர்களும் சொல்கிறார்கள். ஆகவே, நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கை பரிசீலிக்கப்படும். அங்கே அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஒன்று புதிதாக உருவாக்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் செலவாகிறது. கடந்த காலங்களில் அதன் தேவை குறைவாகத்தான் இருந்தது; மாணவர் சேர்க்கையும் குறைவாக இருக்கிறது. நிதிச் சுமை 45 கோடி ரூபாய் செலவும் இருக்கிறது; 5 ஏக்கர் நிலமும் தேவைப்படுகிறது. அந்தக் காரணங்களினால்தான், இவற்றையெல்லாம் சிறிது பரிசீலித்து, அந்தப் பகுதியினுடைய தேவைகளுக்குக்கேற்ப வருங்காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.